தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
எண்.100 அண்ணா சாலை , கிண்டி, சென்னை–600032
தொலைபேசி:044–22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண். 0034/2015/ந

ஆணை எண்.81 /2016

நாள்: 26/ 04 /2016

திரு.எஸ். சிவக்குமார்,
த/பெ.பி.சண்முகவேல்,
மரப்பேட்டை வீதி, பொள்ளாட்சி

மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பொள்ளாட்சி நகராட்சி

எதிர் மனுதாரர்

திரு.எஸ்.சிவகுமார், த/பெ.பி.சண்முகவேல், எண்.301, மரப்பேட்டை வீதி, பொள்ளாச்சி என்பவரிடமிருந்து வரப்பெற்ற 28.04.2015 நாளிட்ட முறையீடு (எண்.0034/2015) மற்றும் ஊர் பொது மக்கள் சிலரது சார்பில் வரப்பெற்ற 18.05.2015 நாளிட்ட முறையீடு (எண்.0070/2015) ஆகியவை ஒரே பொருள் தொடர்பானவை என்பதால் ஒருங்கிணைக்கப்பட்டு உரிய விசாரணைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## ஆணை

திரு.S.சிவக்குமார், த/பெ.பி.சண்முகவேல், எண்.301, மரப்பேட்டை வீதி, பொள்ளாட்சி என்பவரிடமிருந்து வரப்பெற்ற 28.04.2015 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0034 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்மனு மீதான அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து இம்முறை மன்ற நடுவத்தின் 07.05.2015 நாளிட்ட கடித வாயிலாக கோரப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து பொள்ளாச்சி வாழ் பொது மக்கள் சார்பாக 30 நபர்கள் கையொப்பமிட்டு 18.05.2015 நாளிட்ட மனு (எண்.0070/2015) ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்தனர். மேற்படி இரண்டு முறையீடுகளிலும் ஒரே மாதிரியாக கீழ்கண்டுள்ள புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(i) பொள்ளாச்சி டவுன், மரப்பேட்டை வழி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் ஒரு வணிகக் கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும் , பள்ளி வளாகத்தினை வணிக வளாகமாக மாற்றிடுவதற்கு உரிய அரசு அனுமதி வாங்கப்படவில்லை என நகராட்சி ஆணையர் தெரிவித்ததாகவும் நகர்மன்றத்தில் தீர்மானமும் போடப்படவில்லையெனவும் ஒப்புக் கொண்டதாகவும் குறிப்பிட்டது.

(ii) 25.03.2015 அன்று நகராட்சி ஆணையர் ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்ததாகவும் (ந. க. எண். அ 6 / 8004 / 14 நாள் 25.03.2015) அதில் கடந்த 01.04.2015–க்குள் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கை வேண்டியும், அதே தேதியில் வணிகக் கட்டிடம் கட்டிட ஏலம் விடப்போவதாகவும் அறிவிப்பு செய்யப்பட்டிருந்ததெனவும் அந்த தேதியில் ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட்டு அதன் பின்னர் ஒப்பந்ததாரர் மரப்பேட்டை பள்ளி வளாகத்தில் 10 கடைகள் கட்ட வேண்டும் என்பது போலக் குறிப்பிடப்பட்டுள்ளதெனவும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் படி அன்று வரை கட்டிடம் ஏதும் கட்டப்படவில்லை என்பது போலக் குறிப்பிடப்பட்டுள்ளதெனவும் ஆனால் மரப்பேட்டை பள்ளியில் 11 கடைகள் கட்டப்பட்டு அவை 01.04.2015 நாளில்

திறக்கப்பட்டு கடைக்காரர்களின் பயன்பாட்டிற்கு வந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மரப்பேட்டை பள்ளியில் கட்டிடம் கட்டப்படவில்லை என்பது போலக் குறிப்பிட்டு நகராட்சி ஆணையர் அறிவித்துள்ளாரெனவும் அவர் லஞ்சம் வாங்கி அதிகார துஷ்பிரயோகம் செய்து இச்செயலில் ஈடுபட்டுள்ளாரெனவும் இதில் மிகப்பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளதாக தெரிய வருகிறதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) 30. 04. 2015 அன்று நடைப்பெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 22–வது தீர்மானத்திலும் இன்னும் கட்டிடம் கட்டப் பெறவில்லை எனக் குறிப்பிடப்– பட்டுள்ளதாகவும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் திருமதி.சுந்தராம்பாள் மீது தக்க நடவடிக்கை எடுத்து பள்ளி வளாகத்தில் அரசு அனுமதியின்றி கட்டப்பெற்ற வணிகக் கட்டிடங்களை அப்புறப்படுத்திட கோரப்பட்டது.

3) 18.05.2015 நாளிட்ட முறையீட்டில் கையொப்பமிட்டுள்ள நபர்களில் மூன்று நபர்கள் இம்முறை மன்ற நடுவத்தால் தெரிந்தெடுக்கப்பட்டு, அம் முறையீடு அவர்களால் தான் அனுப்பப்பட்டதா என்பது குறித்து முறை மன்ற நடுவத்தின் 25.05.2015 கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி அம்முறையீடு அவர்களால் தான் அனுப்பப்பட்டதென்ற உறுதிக் கடிதங்கள் 09.06.2015 அன்று சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து வரப்பெற்றன.

4) அதன்பின்னர், 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், பிரிவு 8ன் கீழ் விசாரணை நடவடிக்கைகள் துவக்கப்பட்டு மனுதாரர்களில் திரு.K.விஷ்ணு பிரகாஷ், திரு. M.குணா மற்றும் திரு. N.மனோகரன் ஆகியோர் 13.07.2015 அன்று இம்முறை மன்ற நடுவத்தின் விசாரணைக்கு ஆஜராகிடத் தெரிவித்து அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) அதனைத் தொடர்ந்து மனுதாரர்களான திருவாளர்கள் S.சிவக்குமார் த/பெ.சண்முகவேல், K.கண்ணன் த/பெ.குமார், K.விஷ்ணுபிரகாஷ், த/பெ.கொண்டதுரை, T,சரவணக் குமார் த/பெ. K.தங்கவேல், M ரமேஷ்குமார் த/பெ .K.மார்வாணன்,

திருமதி.V.ராஜேஸ்வரி க/பெ.சுரேஷ் மற்றும் திருமதி.M.குணா க/பெ.மயில்சாமி ஆகியோர் இம்முறை மன்ற நடுவத்தின் முன் ஆஜராகி தங்களது எழுத்து பூர்வமான வாக்கு மூலங்களை தாக்கல் செய்தனர்.

மேற்படி வாக்குமூலங்களில் முக்கிய கோரிக்கையாக நகராட்சி வரைபடத்தில் தண்ணீர் செல்லும் ஓடையாக வகைப்படுத்தப்பட்டுள்ள பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 11 வணிகக் கடைகளையும் அப்புறப்படுத்தி பள்ளியின் விளையாட்டு மைதானத்தை மீட்டுத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

6) இது குறித்து கீழ்க்கண்டுள்ள ஆவணங்கள் இம்முறை மன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன.

(i) முதல் முறையீட்டில் குறிப்பிட்டுள்ள பொள்ளாட்சி நகராட்சி ஆணையரது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந. க. எண்.அ6 /8004/ 2014 நாள்.25.03.2015

இந்த அறிவிப்பில் வ.எண்.3ல் 'உரிம இனம்' எனும் தலைப்பின் கீழ் "மரப்பேட்டை பள்ளி பின்புறமுள்ள காலியிடத்தில் 11 X 10 அளவுள்ள 10 கடைகள் கட்டவுள்ளது அதற்கான உரிமம்'' என அறிவிக்கப்பட்டுள்ளது.

7) இது குறித்து 03.11.2015 அன்று நகராட்சி ஆணையர் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது அவரால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் 14.04.2015 அன்று கடைசியாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் 16 பேர் கலந்து கொண்டனர் எனவும் அறிக்கை ஒப்பந்தப்புள்ளி கேட்ட 11 பேர்களுக்கு 11 கடைகளும் ஏல ஒதுக்கீடு செய்யப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

கட்டுமானப் பணிகளைப் பொறுத்தவரை 21.08.2014ல் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 25.08.2014ல் முடிவு செய்யப்பட்டு 01.09.2014ல் பணியினை வழங்கப்பட்டதெனவும், 12.03.2015ல் பணிகள் முடிக்கப்பட்டன எனவும் இப்பணிகள் அனைத்தும் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30.04.2015 அன்று நடைபெற்ற பொள்ளாச்சி நகர் மன்றக் கூட்டத்திற்கான பொருட்களில் பொருள் 22ல் இப்பொருள் இடம் பெற்றுள்ளது. அதனைப் பரிசீலித்தலில் கீழ்க்கண்ட வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

(i) " நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை பள்ளி பின்புறமுள்ள காலியிடத்தில் கட்டப்படவுள்ள கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 25. 03. 2015 மற்றும் 01. 04. 2015 மற்றும் 16.04.2015–ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.''

(ii) அலுவலகக்குறிப்பு: மேற்காண் 11 கடைகளுக்கு நகராட்சி பொறியாளரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை தொகையை விட கூடுதலாக வரப்பெற்றுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

8) மேற்கண்ட ஆவணங்களை ஒப்புநோக்கி இம்முறை மன்ற நடுவத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(i) நகராட்சி ஆணையரது 25.03.2015 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் (ந,க.எண்.அ6/8004/2014 நாள். 25.03.2015) வ. எண். 3–ல் 'உரிம இனம்' எனும் தலைப்பின் கீழ் "மரப்பேட்டை பள்ளி பின்புறமுள்ள காலியிடத்தில் கட்டப்–பட்டுள்ள 11 X 10 அளவுள்ள 11 கடைகளுக்கான உரிமம்'' என்பதற்கு பதிலாக "மரப்பேட்டை பள்ளி பின்புறமுள்ள காலியிடத்தில் 11 X 10 அளவுள்ள <u>10 கடைகள் கட்ட–வுள்ளது அதற்கான உரிமம்</u>'' என தவறாக குறிப்பிடப் பட்டுள்ளது.

(ii) அதே போன்று 30.04.2015 அன்று நகர்மன்றக் கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருளிலும் (எண்.22) "நகராட்சிக்கு சொந்ததான மரப்பேட்டை பள்ளி பின்புறமுள்ள காலியிடத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 25.03.2015 மற்றும் 01.04.2015 மற்றும் 16.04.2015–ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன'' என்பதற்கு பதிலாக

''நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை பள்ளி பின்புறமுள்ள காலியிடத்தில் கட்டப்படவுள்ள கடைகளுக்கு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி 25.03.2015 மற்றும் 01.04.2015 மற்றும் 16.04.2015–ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்ப்ந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது' என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தவறுகளுடன்/பிழைகளுடன் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால் பொதுமக்களின் புகார் எழுந்துள்ளது. ஏல நடவடிக்கைக்கான அறிவிக்கைகளை வெளியிடும் போது மிக்க கவனத்துடன் செயற்படாமல் அசிரத்தையான போக்குடன் செயல்பட்ட அனைத்து அலுவலர்களிடமும் உரிய விளக்கங்கள் பெறுவதுடன் இனி இது போன்று நிகழாவண்ணம் உறுதி அளிக்கப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(9) முறையீட்டின் இரண்டாவது கோரிக்கையான மேற்படி வணிக வளாகம் அமைந்துள்ள இடம் தொடர்பான புகார் குறித்தும் 03.11.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களால் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் விசாரிக்கப்பட்டது. நகாரட்சி ஆணையரால் அளிக்கப்பட்ட எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் இப்பணிகள் அனைத்தும் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டதெனவும் தற்போது கட்டப்பட்ட வணிக வளாகத்திற்கும் பள்ளிக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தமில்லை எனவும் இரண்டும் வெவ்வேறு சர்வே எண்ணில் உள்ளதெனவும் இந்த வணிகவளாகம் கட்டப்பட்டதால் பொதுமக்களுக்கு நன்மையாகத்தான் உள்ளதெனவும் உறுதி செய்து இது தொடர்பான புகைப்படங்களையும் முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு உட்படுத்தினார்.

10) இருப்பினும், முறையீடுகளில் குறிப்பிட்டுள்ள பொருள்களான பள்ளி வளாகம், பள்ளி மைதானம் மற்றும் தொடர்புடைய இனங்களில் நேரடி தொடர்புடைய மரப்பேட்டை நகரவை நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியரை விசாரணைக்கு உட்படுத்திட இம்முறை மன்ற நடுவம் முடிவெடுத்து உத்தரவிட்டது. அதன்படி திருமதி.சுதா, பொள்ளாட்சி மரப்பேட்டை நகரவை நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் 04.04.2016 அன்று இம்முறைமன்ற நடுவம் முன் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்தார். அவ்வமயம் நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. அவர் "நீங்கள் காட்டிய புகைப்படம் பள்ளியினுடைய முன்பகுதி

ஆகுமெனவும் இதுபோன்று முன்புறம் மற்றும் பின்புறம் காம்பவுண்டு சுவர் உள்ளது என தெரிவித்தார். மேலும், தனது வாக்குமூலத்தில் நகராட்சியால் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கும் தங்களது பள்ளிக்கும் இடையே அதிக இடைவெளியுள்ளதெனவும் பள்ளிக்கு வந்து செல்ல தனியே வழியுள்ளதெனவும் பள்ளிக்கும் அந்த கடைகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(10) எனவே, இடம் / ஏல நடவடிக்கைகளில் முறைகேடுகள் என்ற புகார் குறித்து உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படாத நிலையில் அனைத்து தரப்பு விசாரணைகள், வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் முறைகேடுகள் ஏதும் உறுதி செய்யப்படவில்லை என இம்முறை மன்ற நடுவத்தால் முடிவு செய்து ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், மேலே பத்தி 8–ல் குறிப்பிட்டுள்ள அலுவலக நடவடிக்கைகளிலான தவறுகளுக்கு தக்க நடவடிக்கைகள் நகராட்சி நிர்வாக ஆணையரால் தொடரப்பட வேண்டுமென இம்முறைமன்றம் வலியுறுத்துகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்.

1. திரு.S.சிவக்குமார்,
   த/பெ. பி.சண்முகவேல்,
   301, மரப்பேட்டை வீதி,
   பொள்ளாட்சி நகரம், கோயம்புத்தூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   பொள்ளாட்சி நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை–600 005. தக்க தொடர் நடவடிக்கைக்காக